**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 8 ஆம் நாள் செவ்வாய்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி.க. இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 409/2014 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தஞ்சையப்பன் | வயது | : 59 |
| த.பெ | : கோவிந்தசாமி | தாலுக்கா : | |
| கிராமம் | : தேப்பந்தல் | தொழில் : ஆசிரியர். | |

**08.07.2025 – வா.சா. 1 குறுக்கு விசாரணை ( 2 ஆம் பிரதிவாதி தரப்பு)**

1. இந்த வழக்கு சொத்து எனக்குதான் சொந்தம் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கில் பிரதிவாதிகள் 1 முதல் 6 வரை எதிராக தாக்கல் செய்துள்ளேன். தாவா 5 அயிட்ட சொத்து சொத்து விவரம் குறித்து என்னால் கூற முடியுமா என்றால் 98-1 எ ல் 25 செண்ட் விஸ்திரணம் 98 – 1 பில் 10 செண்ட், 98-2 ல் 40 செண்ட் , 87-1 ல் 3 1-2 ஏக்கர் விஸ்திரணம் ஆகும்.

2. என் தந்தை எப்போது இறந்தார் என்றால் 25.07.2007 அன்று காலமானார். எனது தந்தையின் மனைவியின் பெயர் என்னவென்றால் 1 ம் பிரதிவாதி பச்சையம்மாள் ஆவார். எனது தந்தைக்கும் பச்சையம்மாக்கும் எத்தனை குழந்தை என்றால் 4 பேர்கள். அதில் நான் முத்தவர், 2 வது கஸ்துரி ( 2 ம்பிரதிவாதி), 3 வது சுகுணா ( 3 ம் பிரதிவாதி ) 4 வது தமிழ்செல்வி ( 4 ம் பிரதிவாதி ஆவாாகள். )

3. 1 ம் பிரதிவாதி இறந்துவிட்டார். நான் தாக்கல் செய்துள்ள 29.08.1984 ஆவணம் யார் பெயரில் உள்ளது என்றால் எனது தந்தை பெயரில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள 2 வது ஆவணத்தில் பட்ட எண். 206 ல் எனது பெயர் மட்டும் உள்ளதா இல்லை வேறு பெயரும் கூட்டாக உள்ளதா என்றால் தற்போது கூட்டாக தான் வருகிறது. எனக்கு தெரியாமல் அதில் மாற்றம் செய்துள்ளார்கள். மேற்படி வா.சா.ஆ.2 குறிப்பிட்டுளள் சர்வே எண்கள். விஸ்திரணம் எவ்வளவு என்றால் 3 ½ ஏக்கர் ஆகும்.

4. மேற்படி ஆவணத்தில் 3 ½ ஏக்கர் நிலம் 5 பேருக்கும் உரியதா இல்லை எனக்கு மட்டும் உரியதா என்றால் சரிதான், எனக்கு தெரியாமல் கூட்டுபட்டா வாங்கிவிட்டார்கள். வா.சா.2 ல் குறிப்பிட்டுள்ள நபர்கள் என்னுடைய தந்தையின் வாரிசுகள் தானே என்றால் ஆமாம். எனது தந்தை எனக்கு தான் தாவா சொத்துக்கள் என்று கூறிவிட்டார், மேலும் எனது தங்கைகளுக்கு திருமணம் நடத்தி சிரும் செய்து வைத்தார், இதற்கு என்னுடைய சகோதரிகள் சம்மதம் தெரிவித்துவிட்டார்கள்.

5. எனது தந்தை மேற்படி எனக்கு சொத்துக்கள் கொடுத்துவிட்டார் என்று கூறும் நிலையில் அவர் எனக்கு பதிவு செய்த ஆவணம் முலம் சொத்துகக்ளை கொடுத்துவிட்டார என்றால் இல்லை வாய்மொழியாக தான் நாஙக்ள் பேசிக்கொண்டோம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.3 ல் 24.06.2012

தேதியிட்ட உத்தரவு என்னவென்றால் எனக்கு தெரியாமல் சர்வே எண். 98/1எ நிலத்தை தமிழ்செல்வி ( 4ம் பிரதிவாதி ) 5ம் பிரதிவாதிக்கு விற்றுவிட்டார். மேற்கொண்டு எந்த ஒரு ஆவணம் பதிவினையும் தாவா சொத்துக்களில் ஏற்பட கூடாது என்று நான் களம்பூர் சார் பதிவாளர் அலுவலரிடம் மனு கொடுத்தற்கு கொடுத்த உத்தரவு ஆகும்.

6. மேற்படி 4 ம்பிரதிவாதி 5 ம் பிரதிவாதிக்கு சர்வே எண். 98/1எ நிலத்தை விற்றுவிட்டார் என்று கூறுவதற்கு நான் ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்படி ஆவணம் தாக்கல் செயய்வில்லை நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என்றால் என் தந்தை பெயரில் உள்ளது. நான் எப்படி சார் பதிவாளர் களம்பூர் அவர்களுக்கு ஆவண பதிவினை தடை செய்ய வேண்டும் என்று கேட்கலாம் என்றால் என் தந்தை எனக்கு வாய்மொழியாக தாவா சொத்துக்களை கொடுத்துவிட்டார் அதனால் நான் மனு கொடுத்தேன்.

7. என் சகோதரிகள் தாவா சொத்துக்கள் குறித்து தான செட்டில்மெண்டோ, விடுதலை பத்திரமோ எனக்கு எழுதிகொடுத்துவிட்டார்களா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.4 ஆவணத்தில் யார் பெயரில் உள்ளது என்றால் சர்வே எண். 98/1எ, 1எப், 3 எ தமிழ்செல்வி பெயரில் உள்ளது. மேலும் சர்வே எண். 87/1பி, 87/2 என் பெயரில் உள்ளது. மேற்படி வா.சா.4 ஆவணம் நான் வங்கியில் கடன் வாங்குவதற்காக கேட்டு கொண்டதால் கொடுக்கப்பட்ட ஆவணம் ஆகும். நான் இந்த வழக்கை 2008 ல் தாக்கல் செய்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா. 6 வீட்டுவரி ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் எனது தந்தை பெயரில் உள்ளது.

8. மேலும் வா.சா.7 மின்கட்டண ரசீது கள் எனது தந்தை பெயரில் தான் உள்ளது. எனது தந்தை எந்த அயிட்ட சொத்தில் வீடு கட்டியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தை இறந்தபிறகு, மேற்படி வீட்டில் நான், பச்சையம்மாள், தமிழ்செல்வி 3 பேரும் ஒன்றாக வாழ்ந்து வாந்தோம் என்றால் சரிதான். சகோதரிகளுக்கு 15 சவரன் நகைகள் போட்டு திருமணம் செய்து வைத்தாக என் தாவாவில் குறிப்பிட்டு இருக்கிறேன் அதற்கு நான் ரசிது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்களுக்கு 2ம் பிரதிவாதி சார்பு நீதிமன்றம், போளூரில் ஒ.எஸ். எண். 450/2022 பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு என்னுடைய எதிர்வழக்குரைக்காக நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

9. நானும், 1,3,4 பிரதிவாதிகள் கூட்டாக சேர்ந்து 2 ம் பிரதிவாதியை ஏமாற்றவேண்டும் என்ற காரணத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய்யான ஆவணம் கொண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் 2 ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் இந்த தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

Sd/-B.Salma,

District Munsif,

Polur.